

முதலீட்டுக்கான இலக்குகளை நிர்ணயித்துச் செயல்பட இதுவே சரியான தருணம். தமிழ்நாடு அரசு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என இலக்கு நிர்ணயித்துள்ளது. இவ்வாறு இலக்கு நிர்ணயிக்கும்போது, அனைவரும் சேர்ந்து பணியாற்றி அதற்காக உழைப்பார்கள்.

சுற்றுலாத்துறையில் அதிக தொழில் வாய்ப்புகள் உள்ளன. இங்கு ஏராளமான பொறியாளர்களும், உயர் கல்வி படித்தவர்களும் இருக்கின்றனர். எனவே நாம் உற்பத்தித் துறை மட்டுமின்றி இதர துறைகளிலும் வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

**- ரகுராம் ராஜன்**
ரிசர்வ் வங்கி முன்னாள் ஆளுநர்



கடந்த ஆறு மாதங்களாக தமிழகத்தில் தொழில் துறை மற்றும் முதலீட்டுக்கான சூழல் செயல்பாடுகள் மிகச் சிறப்பாக இருப்பதைப் பார்க்கிறேன். ஏராளமான முதலீடுகள் வருகின்றன.

30 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிற்சாலைகள் தமிழகத்தில் செயல்படுவது முன்னெப்போதும் நிகழ்ந்திராதது. இதுபோன்ற சாதகமான அம்சங்களால் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது சாத்தியமானதாக இருக்கும்.

**-அரவிந்த் சுப்பிரமணியன்**
ஒன்றிய அரசின் முன்னாள் பொருளாதார ஆலோசகர்



தமிழகம் தேசிய அளவில் வணிக நடவடிக்கைகளை எளிதாக்குதலில் 14 ஆவது இடத்தில் இருந்து தற்போது மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

ஒட்டுமொத்த உற்பத்தியைப் பொருத்தவரை 2022 - 23 இல் நமது பங்கு 9.6 சதவீதமாகும்.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் தமிழகத்தை முதலீட்டுக்கான மாநிலமாகப் பார்க்கின்றன. கடந்த 2 ஆண்டுகளாக மாநிலம் அதிக அளவிலான முதலீடுகளைப் பெற்றுள்ளது.

2021 மே முதல் தற்போது வரை 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.2.70 லட்சம் கோடிக்கான முதலீடுகள் பெறப்பட்டதுடன், 4 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

**- வேணு சீனிவாசன்**
டி.வி.எஸ். குழுமத் தலைவர்



உலகளாவிய ஹைட்ரஜன் சமூகத்தை வளர்க்க உதவிட வேண்டும் என்பதற்காக ஹூண்டாய் ஹைட்ரஜன் விஷன் அமைப்புடன் இணைந்துள்ளோம்.

சென்னை ஐ.ஐ.டி. மையத்தின் உதவியுடன் ஹைட்ரஜன் ஆதார மையம் ஏற்படுத்திட, தமிழ்நாடு அரசுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள இருக்கிறோம்.

**-உன்சூகிம்**
மேலாண் இயக்குநர்
ஹூண்டாய் மோட்டார் இந்தியா



இந்தியாவில் மிக அதிக தொழிற்சாலைகளின் இருப்பிடமாக தமிழ்நாடு இருக்கிறது.

தமிழ்நாட்டின் தொழிற் கொள்கையாலும், அங்குள்ள தொழிலாளர் வேலை திறத்தாலும் அம்மாநிலம் ஒரு டிரில்லியன் டாலர் என்கிற குறிக்கோளை நிச்சயம் அடையும்.

**- சஜ்ஜன் ஜிண்டால்**
மேலாண் இயக்குநர்
ஜே.எஸ்.டபுள்யு குரூப்

# உலக முதலீட்டாளர்களின் ஒரே தேர்வு தமிழ்நாடே!

## நாளேடுகள் தரும் நற்செய்தி!

